5. அறிவிப்பு.

நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. நான் நேற்று பேரவையில் அறிவித்ததற்கு இணங்க மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் பேச்சில் தேர்வாணைக் குழு பற்றிய குறிப்புகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியுள்ளேன். மேலும், இது தொடர்பான சில பகுதிகளும் நீக்கப்பட்டுள்ளன. நீக்கப்பட்டது போக மீதியுள்ள நடவடிக்கைக் குறிப்புகள் பேரவை நூலகத்தில் வைக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

6. கவன ஈர்ப்பு.

தோளூர்பட்டி கிராமத்தில் (தொட்டியம் தொகுதி) தொழுநோய் மருத்துவமனை மூடல்.

* திரு. ரா. பெரியசாமி: தலைவரவர்களே, திருச்சி மாவட்டம் தொட்டியம் தொகுதியிலுள்ள தோளூர்பட்டி கிராமத்திலுள்ள தொழுநோய் மருத்துவமனை மூடப்பட்டு தற்போது பாழடைந்த நிலையிலுள்ளது பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்—

அறிக்கை.

1971 ஆம் வருடம், திருச்சி மாவட்டம், தோளூர்பட்டியில் ஒரு தொழுநோய் கட்டுப்பாடு நிலையத்தை அமைப்பதற்கு அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இக்கட்டுப்பாடு நிலையம் முன்னால் 100 படுக்கைகளைக் கொண்ட ஒரு தொழுநோய் மருத்துவ மனையாக இருந்த ஒரு பழைய கட்டிடத்தில் அமைக்கப்பட்டது. மேற்கூறிய தொழுநோய் மருத்துவமனை (Lepro-sorium) முன்னால் தனியார் நிறுவனத்தினரால் (Missionary) நடத்தப்பட்டு, அரசுக்கு ஒப்படைக்கப்பட்டது. மேற்கூறிய கட்டிடம் தனியார் நிறுவனத்தினரால் இனாமாகவோ அல்லது பணம் பெற்றுக் கொண்டோ அரசுக்கு ஒப்படைக்கப்பட்டதற்கு தகுந்த ஆதாரங்கள் தற்பொழுது கிடைக்கவில்லை. இக்கட்டிடத்தினை அரசு ஏற்றுக் கொண்டபோதே அது நல்ல நிலையில் இல்லை. இருந்தும், வேறு வசதியான இடம் கிடைக்காததாலும், ஓரளவுக்குத் தேவையான குறைந்த பட்ச வசதி இக்கட்டிடத்தில் இருந்ததாலும், அன்றைக்கு இருந்த நிலையில் தொழுநோய்க் கட்டுப்பாடு நிலையம் அங்கே நிறுவப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS